THE HON. THIRU K. A. MATHIALAGAN : I decline to answer any supplementary question in the public interest.

### சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்கள்

*360 வினா.—திரு. கே. சகாதேவக் கண்டர் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்களிலுள்ள விவசாயிகளின் நிலையை உத்தேசித்து அங்கு விதிக்கப்படும் பொது நன்மை வரியை ரத்துச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இல்லை.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு அபிவிருத்தி வரி, மத்தியஸ்த வரி, தண்ணீர் வரி, நிலத்தின் அடிப்படை வரி என்று இப்படிப் பல வரிகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இது விவசாய மக்களுக்கு அதிகச் சுமையாக இருக்கிற காரணத்தால் அபிவிருத்தி வரியையாவது, அல்லது மத்தியஸ்தம்—காம்பவுண்ட்—செய்யப்பட்டு விதிக்கப்படுகிற வரியையாவது குறைத்துக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது புதுமையாக இருக்கிறது. இந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று வட ஆற்காடு மாவட்டத்திலிருந்தோ அல்லது தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்தோ எந்தவிதமான விண்ணப்பங்களோ மற்றவைகளோ எந்த விவசாயிகளிடமிருந்தும் வரவில்லை என்று இரண்டு கலெக்டர்களும் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. எஸ். முருகையன் :** இந்த சாத்தனூர் அணைக்கட்டு விவசாயிகள் 3, 4 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் சர்க்காருக்கு இப்படிப்பட்ட மனுவை அனுப்பி, ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி செய்ய முடியாது என்று பதில் வந்திருக்கிறது. இப்பொழுது, 2, 3 மாதங்களுக்கு முன்பு கூட அந்தப்பகுதி விவசாயிகள் எல்லாம் ஒன்றுகூடி "ஆறு மாதத்திற்குத் தண்ணீர் பாய்கிறது, இரண்டு போக சாகுபடிக்கு உண்டான தீர்வை வசூலிக்கிறார்கள். 'பெட்டர்மெண்ட் லெவி' வசூலிப்பதால் வரி அதிகமாக இருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் உடனடியாகச் சர்க்கார் நீக்கிவிட வேண்டும்" என்று பலமுறை கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் எந்தக் கோரிக்கையும் தமக்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து வரியைக் குறைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** வேறு ஒரு கேள்வி இதிலிருந்து எழுகிறது. கலெக்டர் சொன்னது சரியா, இல்லையா என்ற கேள்வியைக் கொண்டுவந்து விடுகிறது. நான் தவறான தகவலைக் கொடுத்துவிட்டேன் என்று நினைத்துவிடக் கூடாது. இது இந்தக் கேள்வியோடு சம்பந்தப்பட்டது அல்ல. அங்கத்தினரின் குற்றச்சாட்டின் அடிப்படையில் அம்மாதிரி ஏதாவது புகார்கள் வந்ததா என்று வடார்க்காடு தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர்களை இந்த அரசாங்கம் விசாரணை செய்யும்.